# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்.

**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**( J.O.Code No.TN 02207)**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 13 ம் நாள்**

**அசல் வழக்கு எண்.110/2025**
**CNR No. TNTI07000176-2025**

விஜய் (எ) முகமது பாஷா ... வாதி

..எதிர்..

1. தமிழக அரசு அதற்காக அதன்
   மாவட்ட ஆட்சித் தலைவர்,
   திருப்பூர்.

2. வட்டாட்சியர் அவர்கள்,
   திருப்பூர் வடக்கு வட்டம்,
   திருப்பூர்.

3. பாபுலால் (எ) பாபு .... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 12.03.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.R.இந்திராகாந்தி அவர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.M.கௌதம் அவர்கள் ஆஜராகியும், 3 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.P.கௌரி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள்வரை என் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

விஜய் என்பதும், முகமது பாஷா என்பதும் வாதி ஒருவரின் பெயர் என்று விளம்புகை பரிகாரம் கோரியும், வாதியின் சரியான பிறந்த தேதி 14.01.1983 என்று விளம்புகை பரிகாரம் கோரியும் மற்றும் பாபுலால் என்பதும் பாபு என்பதும் வாதியின் தந்தை பெயர் என விளம்புகை பரிகாரம் கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்**:-

**2.1** வாதியின் பெற்றோர்கள் ராஜாமணி மற்றும் பாபுலால் ஆகும். வாதியின் தாயார் பிறப்பால் இந்து மதத்தை சேர்ந்தவர் வாதியின் தாயாரை வாதியின் தந்தை காதலித்து இந்து முறையில் திருமணம் செய்து கொண்டார். வாதியின் தாயார் கணவர் மீது உள்ள அன்பினாலும், பாசத்தினாலும், அவரது பெயரை பாத்திமா பீபி என பெயர் மாற்றம் செய்து கொண்டார். வாதியின் தாயார் அவரது கணவருடன் வசித்து வந்தபோது இந்து மனைவியாகவே வசித்து வந்தார்.

**2.2** மேற்படி திருமண உறவின் பயனாக கடந்த 14.01.1983 ம் தேதியன்று வாதி பிறந்தார். வாதியின் பெற்றோர்கள் முஸ்லீம் மதத்தினை சேர்ந்தவர்கள் என்பதினால் வாதி பிறந்த போது வாதியின் பெயரினை முகமது பாஷா என பெயர் வைத்து வாதியின் பிறப்பு சான்று பெற்றுள்ளார்கள். வாதியின் பெயர் அவரின் பெற்றோர்களின் விருப்பத்தின் பேரில் முகமது பாஷா என்றே பெருமாநல்லூரில் உள்ள அரசு மேல்நிலை பள்ளியில் படிக்க சேர்த்தார்கள். வாதி மேல்நிலைபள்ளிப் படிப்பை கடந்த 1998 ம் ஆண்டு மார்ச் மாதம் முடித்தார். முகமது பாஷா என்ற பெயரில் வாதிக்கு பள்ளி மாற்று சான்று கொடுத்துள்ளார்கள்.

**2.3** வாதியின் பெயர் அவரின் பெற்றோர்களின் விருப்பப்படி மத்திய அரசால் வழங்கப்படும் ஆதார் அட்டையில் முகமது பாஷா என குறிப்பிட்டு பெற்றுள்ளார். இருசக்கர வாகனத்திற்கான ஓட்டுநர் உரிமத்தினை வாதியின் பெயர் முகமது பாஷா என்ற பெயரில் பெற்றுள்ளார். அவ்வாறே மேற்படி அவரது பெயரில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, பாண்டியன் நகர் கிளையில் கணக்கு எண்.32924770520 ஆரம்பித்து பராமரித்து வருகிறார்.

**2.4** வாதியின் பெற்றோர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். அவ்வாறு வாதியின் தந்தை வாதியையும், அவரின் தாயாரையும் விட்டு பிரிந்து சென்றதோடு மட்டும் அல்லாமல் வாதியின் தாயாரிடம் எத்தகைய விவாகரத்தும் பெற்றுக்கொள்ளாமல் அவரது மதத்தினை சேர்ந்த வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துகொண்டு வாதியையும் அவரின் தாயாரையும் புறக்கணித்து வாழ்ந்து வந்தார். வாதியின் தாயார் கடந்த 26.05.2019 ம் தேதியில் இறந்து விட்டார்.

**2.5** வாதியின் தாயார் இறந்ததற்கு பின்னிட்டு வாதி அவரது தந்தையின் மீது உள்ள கோபத்தினால் அவரது ஆதார் அட்டையில் அவரது பெயரினை விஜய் என்றும், தந்தையின் பெயரை பாபு என்றும் பெற்றுக்கொண்டார். அதன் பின்னிட்டு கேஸ் இணைப்பில் விஜய் என்ற பெயரில் பெற்றுக்கொண்டார்.

**2.6** வாதி, விஜய் என்ற பெயரில் ஆதார் அட்டை பெற்று 10 ஆண்டுகளுக்கும் மேல் ஆனநிலையில், ஆதார் அட்டையில் முகமது பாஷா என்று உள்ளதால், வாதியின் ஆதார் அட்டையினை நாளது தேதி வரையில் நடைமுறைப்படுத்தப்பட முடியாது என்றும், நீதிமன்றம் மூலம் உத்தரவு பெற்றால் மட்டுமே வாதியின் ஆதார் அட்டையினை நடைமுறைபடுத்தப்பட முடியும்.

**2.7** வாதியின் பிறந்த தேதி 14.01.1983 ஆகும். வாதியினை பள்ளியில் சேர்க்க வேண்டி பிறந்த தேதியிலிருந்து 5 வருடம் பூர்த்தியாகி இருக்க வேண்டும் என்பதால் பள்ளியில் சேர்க்க வேண்டிய தேதியினை 14.01.1983 ம் தேதியிலிருந்து 04.07.1982 என்ற தேதியினை வாய்மொழியாக பள்ளியில் தெரிவித்ததன் பேரில் வாதியின் பிறந்த தேதியினை சற்று மாற்றம் செய்து 04.07.1982 என பிறந்த தேதியை மாற்றம் செய்து கொடுத்துவிட்டார்கள்.

**2.8** வாதி பிறப்பு, இறப்பு பதிவு அலுவலரான 2ம் பிரதிவாதியிடம் அவருடைய பெயர் விஜய் (எ) முகமது பாஷா ஒரே நபர் தான் என கூறியபோது, அதற்கு 2ம் பிரதிவாதி அலுவலகம் தங்களால் சான்று தரமுடியாது என்றும், நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தி அனுப்பி விட்டார். எனவே, விஜய் என்பதும், முகமது பாஷா என்பதும் வாதி ஒருவரின் பெயர் என்று விளம்புகை பரிகாரம் கோரியும், வாதியின் சரியான பிறந்த தேதி 14.01.1983 என்று விளம்புகை பரிகாரம் கோரியும் மற்றும் பாபுலால் என்பதும் பாபு என்பதும் வாதியின் தந்தை பெயர் என விளம்புகை பரிகாரம் கோரியும் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>** :

**3.1** வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் மற்றும் மோசடியான ஒன்று. அது சட்டப்படியும், பொருண்மைகளின்படியும், நிலைக்கத்தக்கதல்ல. வாதியின் பெயர் முகமது பாஷா (எ) விஜய் என்பதை நிரூபிக்க சட்டபூர்வமான ஆவணங்களான நோட்டரி பப்ளிக், உள்ளூர் செய்தி தாள்களில் விளம்பரம் மற்றும் பதிவு செய்யப்பட்ட கெஜட் பதிவேடுகளின் மூலம் வாதி தக்க ஆவணங்களின் மூலம் நிரூபணம் செய்ய வேண்டும். வாதியின் தந்தையின் பெயர் பாபுலால் (எ) பாபு என்பதை நிரூபிக்க தக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை.

**3.2** வாதி மோசடியாக இரண்டு ஓட்டுநர் உரிமங்களை இரண்டு பெயர்களில் பெற்றுள்ளதால், 1998ம் ஆண்டு மோட்டார் வாகன சட்டம், பிரிவு 6ன் படி வாதி குற்றம் புரிந்தவர் ஆவார். வாதியின் தாயார் ராஜாமணி (எ) பாத்தீமா பீபியின் வாரிசு சான்றிதழை வாதி தாக்கல் செய்யவில்லை. வாதி சட்ட நடைமுறைகளை பின்பற்றாமல் வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை மோசடியாக தயார் செய்துள்ளார். எனவே, அசல் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. <u>3ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை இல்லையென்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.</u>**

**5. <u>வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன</u> :-**

| | |
|---|---|
| 1. | Whether the plaintiff is entitled for the relief of declaration as prayed for? |
| 2. | To what other reliefs? |

**6.** வாதி தரப்பில், வா.சா.1 மற்றும் வா.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 17 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை

**7.** வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், வாதியின் பெயர் விஜய் (எ) முகமது பாஷா என்பதையும், அவரது தந்தை பெயர் பாபு (எ) பாபுலால் என்பதையும், வாதியின் பிறந்த தேதி 14.01.1983 என்பதையும் வா.சா.1 மற்றும் வா.சா.2ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.17 வரையிலான

சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று வாதிட்டார்.

8. பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், வாதி அவரது வழக்கை தக்க சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கவில்லை என்றும், அசல் வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், எனவே, தாவா தள்ளுபடியாக வேண்டுமென்று வாதிட்டார்.

9. <u>தீர்வு</u>
<u>எழுவினா</u> 1 :

| | |
|---|---|
| 1. | Whether the plaintiff is entitled for the relief of declaration as prayed for? |

9.1. வாதியின் பெற்றோர்கள் ராஜாமணி மற்றும் பாபுலால் என்றும், பிறப்பால் இந்துவான வாதியின் தாயார் ராஜாமணி முஸ்லீம் மதத்தை சேர்ந்த பாபுலாலை காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றும், அவர்களுக்கு 14.01.1983 ம் தேதியன்று வாதி பிறந்தார் என்றும், வாதிக்கு முகமது பாஷா என்று அவரது பெற்றோரால் பெயர் வைக்கப்பட்டது என்றும், வாதியின் பெற்றோர்களுக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பாபுலால் வாதியின் தாயாரை பிரிந்து சென்று முஸ்லீம் மதத்தை சேர்ந்த வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு வாதியையும், அவரது தாயாரையும் புறக்கணித்து வாழ்ந்து வந்தார் என்றும், கடந்த 26.05.2019 ம் தேதியன்று வாதியின் தாயார் இறந்து விட்டார் என்றும், வாதி அவரது தந்தை மீது இருந்த கோபத்தின் காரணமாக அவரது பெயரை விஜய் என்றும், அவரது தந்தையின் பெயரை பாபு என்றும் குறிப்பிட்டு ஆதார் அடையாள அட்டை மற்றும் இதர ஆவணங்களை பெற்றுள்ளார் என்றும், வாதியின் ஆதார் அடையாள அட்டையின் தகவல்களை மேம்படுத்துவதற்காக இ

சேவை மையத்தை அணுகியபோது அவரது ஆதார் அடையாள அட்டை முகமது பாஷா பெயரிலேயே இருந்த விபரம் தெரிய வந்தது என்றும், அதேபோல் வாதியின் ஆதார் அடையாள அட்டையில் அவரது தந்தை பெயர் பாபுலால் என்பதற்கு பதிலாக பாபு என்று உள்ளது என்றும், வாதியின் பிறந்த தேதியை அவரது பெற்றோர்கள் தவறாக தெரிவித்து பள்ளியில் சேர்த்துள்ளார்கள் என்றும், எனவே, விஜய் என்பதும், முகமது பாஷா என்பதும் வாதி ஒருவரின் பெயரே என்றும், பாபுலால் என்பதும், பாபு என்பதும் வாதியின் தந்தையின் பெயர் என்பதும், 14.01.1983 தான் வாதியின் சரியான பிறந்த தேதி என்றும் விளம்புகை பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9.2** வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்களை பரிசீலிக்கும் போது, கடந்த 14.01.1983ம் தேதியன்று பாபுலால் மற்றும் பாத்தீமா பீபி தம்பதியருக்கு முகமது பாஷா என்ற மகன் பிறந்துள்ளதாக வா.சா.ஆ.1 பிறப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. பள்ளி மாற்று சான்றிதழான வா.சா.ஆ.2ல் வாதியின் பெயர் முகமது பாஷா என்றும், அவரது தந்தை பெயர் பாபுலால் என்றும், வாதியின் பிறந்த தேதி 04.07.1982 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழான வா.சா.ஆ.3 மற்றும் S.B.I வங்கியின் அடையாள அட்டையான வா.சா.ஆ.5 ஆகியவற்றில் வாதியின் பெயர் முகமது பாஷா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**9.3** வாதியின் ஆதார் அடையாள அட்டையான வா.சா.ஆ.8, கேஸ் இணைப்பு புத்தகமான வா.சா.ஆ.9, ஓட்டுனர் உரிமமான வா.சா.ஆ.10, வாக்காளர் அடையாள அட்டையான வா.சா.ஆ.11, கடவுச்சீட்டான வா.சா.ஆ.12, கனரா வங்கி கணக்கு புத்தகமான வா.சா.ஆ.13, குடும்ப அட்டையான வா.சா.ஆ.14, வருமானவரி கணக்கு அட்டையான வா.சா.ஆ.15 ஆகிய ஆவணங்களில் அவரின் பெயர் விஜய் என்றும், அவரது தந்தை பெயர் பாபு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்,

வா.சா.ஆ.10 வாதியின் ஓட்டுநர் உரிமத்தில் பிறந்த தேதி 14.01.1983 என்று குறிப்பிடப்பட்டுள்ளதும், மேற்படி அனைத்து ஆவணங்களிலும் வாதியின் முகவரியான 8/2466, சவுண்டம்மன் கோவில் வீதி, பாண்டியன் நகர், நெருப்பெரிச்சல், பூலுவபட்டி, திருப்பூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**9.4** வாதியின் ஆதார் அடையாள அட்டையான வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.8 ஒரே ஆதார் அடையாள எண்ணுக்கு வழங்கப்பட்டிருந்தாலும், வா.சா.ஆ.4 முகமது பாஷா பெயரில் 04.07.1982 பிறந்த தேதியாக குறிப்பிட்டும், வா.சா.ஆ.8 ல் விஜய் என்ற பெயரில் 14.01.1983 பிறந்த தேதியாக குறிப்பிட்டும் வழங்கப்பட்டுள்ளது. வாதியின் தாயாரின் இறப்பு சான்றிதழான வா.சா.ஆ.7 ல் அவரது கணவர் பெயர் பாபு என்றும், தந்தை பெயர் வெள்ளியங்கிரி என்றும் குறிப்பிட்டு இறப்பின் போது இறந்தவரின் முகவரி என்று இடத்தில் வாதியின் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அதே விபரங்களை குறிப்பிட்டு வா.சா.ஆ.4 ராஜாமணியின் ஆதார் அடையாள அட்டையும் வழங்கப்பட்டுள்ளது.

**9.5** வாதி தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.2 அவரது சாட்சியத்தில், ராஜாமணி அவரது உடன் பிறந்த சகோதரி என்றும், வாதி அவரது சகோதரியின் மகன் என்றும், வாதியின் தந்தை முஸ்லீம் மதத்தை சேர்ந்தவர் என்பதால் வாதிக்கு முகமது பாஷா என பெயர் வைத்ததாகவும், வாதியின் பெற்றோர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து விட்டார்கள் என்றும், இதனால் மனமுடைந்த வாதி அவரது பெயர் விஜய் என்றும், அவரது தந்தை பெயர் பாபு என்றும் மாற்றி வைத்துக்கொண்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் வா.சா.2 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ள வெள்ளியங்கிரியின் இறப்பு சான்றிதழான வா.சா.ஆ.17 ல் அவரது வாரிசுகள் விபரத்தில் ராஜாமணி மற்றும் வா.சா.2 ன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதில் இருந்து மேற்படி இருவரும் உடன்பிறந்த சகோதர, சகோதரி என்பது உறுதியாகிறது.

**9.6** மேற்படி சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை ஒருங்கே பரிசீலிக்கும்போது, இந்து மதத்தை சேர்ந்த வாதியின் தாயாரும், முஸ்லீம் மதத்தை சேர்ந்த வாதியின் தந்தையும் காதலித்து திருமணம் செய்து கொண்டுள்ளார்கள் என்பதும், மேற்படி கலப்பு திருமணத்தில் பிறந்த வாதிக்கு அவரது பெற்றோர்கள் முகமது பாஷா என்று பெயர் வைத்துள்ளதும், அவ்வாறே அவரது ஆரம்ப கால ஆவணங்களான பள்ளி சான்றிதழ்கள் மற்றும் இதர ஆவணங்களில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

**9.7** மேலும், வாதியின் பெற்றோர்களுக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவர்கள் பிரிந்த பிறகு வாதியின் தந்தை வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்ட கோபத்தில் வாதி அவரது பெயரை விஜய் என்றும், அவரது தந்தை பெயரை பாபு என்றும் குறிப்பிட்டு வா.சா.ஆ.8 முதல் 15 ஆவணங்களில் பெற்றுள்ளதும் தெரியவருகிறது. வா.சா.ஆ.2 பள்ளி மாற்று சான்றிதழ் மற்றும் வா.சா.ஆ.4 ஆதார் அடையாள அட்டை ஆகியவற்றில் வாதியின் பிறந்த தேதியாக இருவேறு தேதிகள் குறிப்பிட்டிருந்தாலும், வாதியின் பிறப்பு சான்றிதழில் அவரது பிறந்த தேதி 14.01.1983 என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

**9.8** மேலும் வாதியின் தந்தையான 3ம்பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி மேற்படி வாதி தரப்பு வழக்கை ஒப்புக்கொண்டு அவரது தரப்பில் எதிர்வழக்குரை இல்லையென்று மேற்குறிப்பு செய்துள்ளார். எனவே, வாதி அவரது வழக்கை தக்க சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதாக முடிவு செய்து, வாதி கோரிய விளம்புகை பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா 1ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**எழுவினா 2:**

| | |
|---|---|
| 2. | To what other reliefs? |

**9.9** வாதி கோரிய விளம்புகை பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்று எழுவினா.1 க்கு தீர்வு கண்டதன் அடிப்படையில் வாதிக்கு வேறெந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 2 க்கு இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவில்,**

**தாவா கீழ்கண்டவாறு அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

(i) விஜய் என்பதும், முகமது பாஷா என்பதும் வாதி ஒருவரின் பெயர் என்று விளம்புகை செய்தும்,

(ii) பாபுலால் என்பதும் பாபு என்பதும் வாதியின் தந்தை பெயர் என்று விளம்புகை செய்தும்,

(iii) வாதியின் சரியான பிறந்த தேதி 14.01.1983 என்று விளம்புகை செய்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

(iv) செலவுத்தொகை இல்லை

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் தீர்ப்பு அவையறிய பகரப்பட்டு, மேற்படி தேதியன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.27 17:28:12 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.

**வாதி தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| வா.சா.1 | விஜய் (எ) முகமது பாஷா |
| வா.சா.2 | ஆறுமுகம் |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** :–

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | – | வாதியின் பிறப்பு சான்று | அசல் |
| வா.சா.ஆ.2 | – | வாதியின் பள்ளி மாற்று சான்று | அசல் |
| வா.சா.ஆ.3 | – | வாதியின் 10ம் வகுப்பு பள்ளி மதிப்பெண் பட்டியல் சான்று | அசல் |
| வா.சா.ஆ.4 | – | வாதியின் ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| வா.சா.ஆ.5 | – | முகமது பாஷா பெயரில் உள்ள வாதியின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் | அசல் |
| வா.சா.ஆ.6 | – | வாதியின் தாயாரின் ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| வா.சா.ஆ.7 | – | வாதியின் தாயாரின் இறப்பு சான்று | அசல் |
| வா.சா.ஆ.8 | – | விஜய் பெயரில் உள்ள ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டுபார்க்கப்பட்டது. |
| வா.சா.ஆ.9 | – | விஜய் பெயரில் உள்ள கேஸ் இணைப்பு அட்டை | அசல் |
| வா.சா.ஆ.10 | – | விஜய் பெயரில் உள்ள ஓட்டுனர் உரிமம் | அசல் |
| வா.சா.ஆ.11 | – | விஜய் பெயரில் உள்ள வாக்காளர் அடையாள அட்டை | அசல் |
| வா.சா.ஆ.12 | – | விஜய் பெயரில் உள்ள கடவுசீட்டு | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |
| வா.சா.ஆ.13 | – | விஜய் பெயரில் உள்ள வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் (2 எண்ணிக்கை) | அசல் |
| வா.சா.ஆ.14 | – | வாதியின் குடும்ப அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.15 | – | வாதியின் வருமான வரி அட்டை | அசல் |
| வா.சா.ஆ.16 | – | வா.சா.2 ன் ஆதார் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. |
| வா.சா.ஆ.17 | – | வெள்ளிங்கிரியின் வாரிசு சான்றிதழ் | அசல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :–**

இல்லை.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.27 17:28:20 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.

<u>Fair / Draft Judgment</u>

O.S.No.110/2026

Dated: 27.03.2026

ADMC – Tiruppur